மோசடிகளின் காரணமாக விரயமாவதினால்

www.facebook.com/NavamaniOfficial

நவமணி

# இலஞ்சமும் ஊழலுமற்ற நேர்மையான இலங்கையை உருவாக்க ஒன்றிணைவோம்



சட்டத்தரணி சால்தீன் எம். சப்ரி BA Hons, LLB
உதவிப்பணிப்பாளர் (சட்டம்)
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.

## ஊழல் எதிர்ப்பு தின சிறப்புக் கட்டுரை

இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தார்மீகப் பொறுப்பினைச் சுமந்துள்ள சுயாதீன நிறுவனமாக விளங்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக் குழுவானது இற்றை வரைக்கும், வழக்குகளை புலனாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தொடரல் என்பவற்றையே தமது பிரதான குறிக்கோளாக கொண்டு செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் சமகாலத்தில் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் வெற்றியடைந்த நாடுகளின் அனுபவங்களை முன்னுதாரணமாகக் கொண்டு புதிய செல்நெறியில் பயணிப்பதற்கான பரீட்சார்த்த முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

இலஞ்சம் மற்றும் ஊழல் சார்ந்த விடயங்களை கையாளும் வெளிநாட்டு நீதித்துறையை அவதானிக்கும் போது. அவர்களது வினைத்திறன் மிக்க கூப்ப நிவாரண பொறிமுறைகளே மிக முக்கியமான அம்சமாக இருப்பதனை

இச்சட்ட மூலத்தை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்திய மாண்பு மிகு பிரதமர் அவர்கள் இச்சட்ட மூலத்தை நடைமுறைக்கு கொண்டு வரும் போது இலஞ்சத்துடன் தொடர்புடைய சகல குற்றவாளிகளையும் கைது செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அதிகாரம் கிடைக்கும். இந்நாட்டின் எல்லா பிரஜைகளும் ஒத்துழைப்பு வழங்காது மேற்படி சட்டத்தை

சட்டப்பரப்பினுள் உள்ளீர்ப்பதில் பயனில்லை. இந்நாட்டு பொதுமகனின் பொறுப்புடைமையுடன் கூடிய செயற்பாட்டின் மூலமே எதிர்காலத்தில் இலஞ்ச மோசடிகளை தடுத்து நிறுத்துவதற்கு எங்களால் உதவக் கூடியதாக இருக்கும்.

சட்ட மூலத்தின் மூலம் ஆரம்பத்தில் வழக்கு நடவடிக்கையானது சட்டமா அதிபரின் மூலமே மேற்கொள்ளப்பட்டது. இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகள் கிரமமாக அதிகரிக்கத் தொடங்கியமையினால் 1958 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலஞ்சம்

பிரிவு அதன் கட்டமைப்பு உள்ளடக்கம் தொடர்பிலான குழு ரீதியான கலந்துரையாடலும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்ததுடன் அரச தனியார் துறை சார்ந்தவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மேலும்; ஊழலுக்கு எதிராக செயற்படும் நிறுவனங்களை சுயாதீனமானதாகவும், பலமிக்கதாகவும் மாற்றும் நோக்கில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஜகார்த்தா பிரகடனம் தொடர்பான விஷேட உலகளாவிய நிபுணர் குழு சம்மேளனம் (EGM) உலகம் பூராகவும் ஊழலுக்கு எதிராக செயற்படும் சுமார் 30 நாடுகளின் செயற்பாட்டாளர்கள், விஷேட நிபுணர்களின் பங்குபற்றலுடன் கடந்த ஜூலை மாதம் இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கொழும்பில் நடைபெற்றமை இலங்கைக்கு கிடைத்த பெருவெற்றியாகும்.

இலங்கையின் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு.

தடுப்பு நிவாரண பொறிமுறைகளே மிக முக்கியமான அம்சமாக இருப்பதனை உணரக் கூடியதாகவுள்ளது. கூடுதலாக,மக்களின் மனப்பாங்கு மாற்றம் என்பது இந்த முயற்சியில் பிரதான பங்கினை வகிக்கின்றது. அந்த வகையில், மழலைக் காலம் முதல் தலைமுறைகளுக்கு பரந்துபட்ட விழுமியங்கள் புகுத்தப்படல் வேண்டும். அறிவுத் திறன் மற்றும் கருத்தியல் செறிவு கொண்டதான தலைமுறை ஒன்றை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

குறிப்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சம் யாதெனில் இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை சட்டம் மற்றும் தண்டனைகள் வழங்குவதன் மூலம் மாத்திரம் இல்லாதொழிக்க முடியாது என்பதும் இதுவிடயத்தில் சமகாலத்தில் இலங்கையும் பிறநாடுகளும் தடுப்பு நிவாரண வேலைத்திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவானது வருடாந்தம் சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தினை நேர்மையானதும் ஊழலற்றதுமான தேசத்தை நோக்கி எனும் தொனிப்பொருளில் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வருட நிகழ்வுகளினை வெகுவிமரிசையாக நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பாராத அரசியல் மாற்றங்கள் காரணமாக ஒத்தி வைக்க வேண்டிய நிலைமை உருவாகியமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் புதிய செல்நெறியில் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனலாம். அதற்கான மக்கள் ஆதரவும் அரசியல் அபிலாசையும் மிகவும் அவசியமானதாகும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவானது இவ்வருட சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்ினூடே இலஞ்சமும் ஊழலுமற்ற நேர்மையான இலங்கையை உருவாக்கும் வகையில் மக்களை நெறிப்படுத்தி மனப்பாங்கு மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையிலும் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

### ஊழலுக்கு எதிரான சர்வதேச தினம் ஒரு பார்வை

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிற்கு ஊழல் மோசடிகள் எந்தளவு பாரதூரமானது என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் தாபனம் விஷேட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. நாடொன்றில் ஊழலும் மோசடியும் தலைவிரித்தாடுவதன் காரணமாக அந்நாட்டு மக்களின் நலனுக்காக ஒதுக்கப்பட வேண்டிய எவ்வளவோ பணம் வீண்விரயமாவதுடன், நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கிய நாடொன்றின் நகர்வில் ஊழல் மோசடியானது பாரதூரமான பின்னடைவை ஏற்படுத்தும் என்பது ஊழல் தொடர்பிலான ஆய்வு முடிவுகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

இவ்வாறான ஆய்வுகளின் பெறுபேறாகவே ஐக்கிய நாடுகள் தாபனம் மூலம் 2003 ஆம் ஆண்டில் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சமவாயம் ஏற்றங்கீகரிக்கப்பட்டதுடன் உலகின் 177 நாடுகள் அச்சமவாயத்திற்கு ஆதரவாக கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊழலுக்கு எதிரான இச்சமவாயத்தில் கைச்சாத்திட்ட நாடுகளில் ஆசிய கண்டத்தில் கைச்சாத்திட்ட முதல் நாடாக இலங்கை விளங்குவதுடன், உலக நாடுகளுக்கிடையில் ஏற்றங்கீகரித்த இரண்டாவது நாடாகவும் மிளிர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஊழலுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் வெளியான முதலாவது சட்டரீதியான சமவாயமாகவும் இது விளங்குகின்றது. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இச்சமவாயத்தினை வெளியிட்டு உரைநிகழ்த்திய அப்போதைய ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயலாளர் நாயகம் கொபி

ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலஞ்சம் தொடர்பான திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இலஞ்ச ஆணையாளர் பதவியும் ஏற்படுத்தப்பட்டது.

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் பதவிநிலை தரத்திற்கும் மேலான அரசாங்க அலுவலர்கள் ஆகியோருக்கு வருடாந்தம் அவர்களின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துவதை இச் சட்டம் கட்டாயமாக்கியது. அது தொடர்பான குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கான அதிகாரம் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் இலஞ்சம் தொடர்பான திணைக்களத்திற்கு பதிலாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான சுயாதீன ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க திருத்தத்தச் சட்டத்தின் மூலம் ஊழல் தொடர்பான தொடர்பான குற்றம் புதிதாக இலங்கை சட்டப்பரப்பினுள் அறிமுகப்படுத்தப்பட்டது.

1997 ஆம் ஆண்டில் இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 17 ஆம் திருத்தத்திற்குப் பின்னர், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான சுயாதீன ஆணைக்குழுவொன்றானது (CIABOC). மீயுயர் நீதிமன்றங்களின் ஓய்வுபெற்ற இரு நீதிபதிகள் மற்றும் குற்றப் புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகியவற்றில் பரந்துபட்ட அனுபவத்துடன் கூடிய ஓர் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அலுவலர் ஆகியோர் இதற்கு தலைமை வகிக்கின்றனர். 2015 களில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சொந்த தற்துணிபின் பேரில் புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கு அதற்கு அனுமதியளித்து அவ் ஆணைக்குழுவின் தத்துவங்களை 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தமானது அதிகரித்தது.

அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் எதிர்ப்பு ஒப்பந்தத்திற்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதோடு, அந்த அமைப்பின் இலங்கை பற்றிய பின்னணி அறிக்கையின் சிபாரிசுகளுக்கு அமைய மற்றும் 70 நாடுகளின் பங்கேற்புடன் நிறைவேற்றப்பட்ட திறந்த அரசாங்க கூட்டு ஒப்பந்தத்தின்(Open Government Partnership)-பிரகாரம் 2016

இலங்கையின் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளில் பிராந்திய ரீதியில் முன்மாதிரியாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்படும் நிலையினை மையமாகக் கொண்டு ஊழலுக்கு எதிரான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்புடனான பயணத்துக்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரமாக கருதப்படுவதுடன் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் (UNCAC) 6 மற்றும் 36 வது பிரிவுகளினை பயனுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்கான அறிவினை விருத்தி செய்து கொள்ளும் உன்னத நோக்கில் சமவாயத்தில் கையெழுத்திட்ட அங்கத்துவ நாடுகளின் வேண்டுகோளிற்கிணங்க ஊழலுக்கு எதிரான நிறுவனங்களின் கொள்கைகள் தொடர்பான ஜகார்த்தா பிரகடனம் தொடர்பான அறிவுசார் கலந்துரையாடலை விருத்தி செய்தல் எனும் தொனிப்பொருளுடனான குறித்த மாநாட்டின் நிறைவில் கொழும்பு பிரகடனம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2015 தேர்தல் வாக்குறுதிகளால் முன்னுரிமை அளிக்கப்பட்ட ஆணைக்குழு தற்போது இலஞ்சம் மற்றும் ஊழல் இல்லாத தேசத்தினை உருவாக்கும் பணியினை கச்சிதமாய் முன்னெடுத்து வருகின்றது. சிதறிய திட்டங்களும், பொறுப்புக்களும், பொறுப்புணர்வுகளும் தற்போது தீவிர முயற்சிகளுக்கு உட்பட்டுள்ளன. கடந்த காலங்களைப் போல், தற்போது சட்ட அமுலாக்கம் தொடர்பில் பேசுவதற்கு இடமளிக்கா வகையில் வெளிப்படைத்தன்மையுடன் ஆணைக்குழுவின் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறாக ஆணைக்குழுவானது புதிய திருப்பங்களுடன் பயணிக்கின்றது.

அவ்வகையில் ஆணைக்குழுவுடன் தொடர்புடைய அடிப்படைச் சட்டங்களான 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்ச சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம் ஆகியவற்றில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகளின் போது, ஆணைக்குழு முகம் கொடுக்கும் பிரச்சினைகளை தவிர்க்கும் பொருட்டும், ஆணைக்குழு இதுவரை காலமும் முகங் கொடுத்த பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் மேற்படி சட்டங்களை திருத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது நாட்டு மக்களுக்கு கிடைத்த ஒப்பற்ற வெற்றியாகும்.

அவ்வகையில் 2018 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலஞ்ச திருத்த சட்டத்தின் மூலம் இலஞ்ச சட்டத்தின் 70ஆவது பிரிவான ஊழல் தொடர்பான குற்றங்களுக்கு இதுவரை காலமும் நீதிவான் நீதிமன்றத்திற்கு மாத்திரம் காணப்பட்ட [illegible]

ஊழலுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் வெளியான முதலாவது சட்டரீதியான சமவாயமாகவும் இது விளங்குகின்றது. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இச்சமவாயத்தினை வெளியிட்டு உரைநிகழ்த்திய அப்போதைய ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயலாளர் நாயகம் கொபி அனான் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படவேண்டிய நிதி ஊழல் மோசடிகளின் காரணமாக விரயமாவதினால் நாடுகளின் சாதாரண வறிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் பொருளாதாரம் பின்னடைவுற்று வறுமை நிலை அதிகரிக்கவும் காரணமாகின்றன. எனவே வறுமையை இல்லாதொழிப்பதற்கும் நிலையான பொருளாதார நிலைமையை கட்டியெழுப்புவதற்கும் எதிராக விளங்கும் பாரிய தடையாக காணப்படுவது ஊழல் மோசடிகளாகும்.

இதன்படி ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மூலம் 2003ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் குறிக்கோள்களாவன.

- ஊழலைத்தடுப்பதற்கும், இல்லாதொழிப்பதற்கும் உதவும் வகையிலான பொருத்தமான சூழலை ஏற்படுத்தல்.
- விசேடமாக விசாரணை,நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பொறுப்புக்களை சிறப்புற மேற்கொள்வதற்கான பொறிமுறையைப் பலப்படுத்தல்.
- ஊழலைத் தடுத்து நிறுத்தும் வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நெறிகளை நடாத்துதல்.
- தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு தேவைகளை உறுதிப்படுத்தும் வகையிலான உபாயங்களை அறிமுகப்படுத்தல்.
- ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சமவாயம் மற்றும் ஊழலுக்கு எதிரான தேசிய செயற்றிட்டத்தை சிறந்த திட்டமிடலுடன் நடைமுறைப்படுத்துவதற்கான விசாரணைப் பொறிமுறைகளை ஸ்தாபித்தல்.

உலக நாடுகளுக்கே பெரும் சவாலாக விளங்கும் ஊழல் மோசடிகளானவை இலங்கைக்கும் பொருந்துவதாகவே உள்ளது. ஊழலுக்கு எதிராக செயற்படுவதற்கு இச்சமவாயமானது அளப்பரிய வாய்பினை ஏற்படுத்தித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டம்: வரலாற்றுப் பார்வை

இலங்கை பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த போது 1883 களில் இலஞ்சமானது தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் குற்றம் ஒன்றாக்கப்பட்டதுடன் 1931-1941 காலப்பகுதியில்; இலஞ்சத்தின் அதிகரிப்புடன், ஆளுநர் நாயகம் எல்.எம்.டி. த சில்வா ஆணைக்குழு, கேனமன் ஆணைக்குழு, மற்றும் எம்.டபிள்யு. எச். த சில்வா ஆணைக்குழு முதலான ஆணைக்குழுக்களை நியமித்தார். சுதந்திரக்காற்றினை சுவாசித்ததன் பின்பே இலஞ்சம் தொடர்பான பிரத்தியேக சட்டம் 1954 ஆம் ஆண்டிலேயே இலங்கை சட்டப்பரப்பினுள் அறிமுகமானது.

அப்போதைய மாண்புமிகு பிரதமர் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல அவர்களின் மூலம் 1954ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டமாக இலஞ்சம் தொடர்பான சட்டம் அறிமுகமானது.

மற்றும் 70 நாடுகளின் பங்கேற்புடன் நிறைவேற்றப்பட்ட திறந்த அரசாங்க கூட்டு ஒப்பந்தத்தின்(Open Government Partnership)-பிரகாரம் 2016 ஒக்டோபர் 19 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி இலங்கையில் புதிய ஊழல் தடுப்பு பிரிவொன்றை நிறுவுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் அதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழித்த பல நாடுகள் வெற்றியடைவதற்கான காரணம் குற்றவாளிகளை கைசெய்து தண்டனை வழங்குவது மாத்திரமல்ல என்பது தெளிவான ஆதாரமாகும். விசேடமாக இலங்கையைப் போன்று பிரித்தானியாவின் காலனித்துவத்தின் கீழிருந்த மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் சீனாவின் தனியான நிர்வாக அலகான ஹொங்கோங் தேசம் சர்வதேச மட்டத்தில் ஊழலை இல்லாதொழித்த நாடுகளில் முதலிடத்தில் திகழ்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அவர்களது சக்தி மற்றும் வளங்களில் 40% தடுப்பு நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. அதற்கமைய, அந்த நாடுகளில் ஊழலை தடுப்பதற்கு தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் மூலம் ஊழலை தடுப்பதற்கான முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. முழு சமூகத்தினது அரசியல் அபிலாஷைகளும் ஊக்கமும் அதன்பால் ஈர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவுக்கு அவ்வாறான விசேட தடுப்பு திட்டமொன்று உருவாக்குவதற்கான அனுமதியானது ஏலவே முன்வைக்கப்பட்டுள்ளதற்கிணங்க கடந்த 2017 இல் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 2018 இல் இலங்கையிலிருந்து ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றினை உருவாக்குவதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றமை ஆணைக்குழுவின் ஊழலுக்கு எதிரான பயணத்தை தொடர்வதற்கு பெரிதும் உத்வேகம் அளிக்கும் செயற்பாடுகளாகக் கருதலாம்.

கடந்த வருடம் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் மலேசியாவின் நேர்மைத்திறன் நிலையமான (Integrity Institute) இன் தலைவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இலங்கையின் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் பிரதானிகள் அழைக்கப்பட்டு ஊழல் தடுப்பு நிவாரணம் தொடர்பில் ஒரு நாள் செயலமர்வினூடே தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் விஷேட விசாரணைப்

[illegible]

தின் 70ஆவது பிரிவான ஊழல் தொடர்பான குற்றங்களுக்கு இதுவரை காலமும் நீதிவான் நீதிமன்றத்திற்கு மாத்திரம் காணப்பட்ட நியாயாதிக்கம் மேல்நீதிமன்றத்திற்கும் வழங்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டமை ஆணைக்குழுவிற்கு கிடைத்த பெரு வெற்றியாகும்.

மேலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டமும் மிகவும் முக்கியமானதொன்றாகும். அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க நிறைவேற்று ஆளணியினரின் தன்வருமானத்திற்கு மேலதிகமாக முறையற்ற விதத்தில் சொத்துக்களை சேகரிப்பதை தடுக்கவும், அவ்வாறு சேர்த்த சொத்துக்களை அபகரிக்கவுமே இந்த சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், இவை கால ஓட்ட நகர்வில் மாற்றமடையலாம். ஆனால் அது எமது சமுதாயத்தில் யதார்த்தமாக்கப்படவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இருப்பினும், இலஞ்சம் ஊழல் ஆணைக்குழு கடந்த கால கறை படிந்த நிலைமைக்கு முற்றுப்பள்ளி வைத்து இச்சட்டத்தை திருத்துவதற்கு முன்வந்து முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன அவர்களின் புரட்சிகரமான இந்த பயணம் நாளைய வெற்றிகரமான இலங்கையை உருவாக்கவும் சட்டம் மற்றும் கலாசார ரீதியான திருப்பத்தினை இலங்கையில் ஏற்படுத்துவதற்கான நல்லதோர் ஆரம்பம் எனலாம்.

இவ்வகையில் இலஞ்ச சட்டம் மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தினை திருத்துவதற்கான பிரேரணைகளும் வரைவாக்கப்பட்டு உரிய அனுமதிகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளன. இதற்கான அங்கீகாரம் கிடைக்குமாயின் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் இணையத்தினூடாக முன்வைப்பதற்கான காலம் வெகுவிரைவில் உதயமாகும் எனலாம்.

பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்த நிலையில் நவீன முறைமையை அறிமுகப்படுத்தியுள்ள ஆணைக்குழுவானது அடைந்த வெற்றிகளில் இன்னுமொன்றாக பதிவாகின்றது நிவாரண வேலைத்திட்டமாகும். இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது இலஞ்சம் மற்றும் ஊழலை தடுத்து நிறுத்துவதும் ஒப்பற்ற பணியாகும்.

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...

# இலஞ்சமும் ஊழலுமற்ற

07ஆம் பக்க தொடர்ச்சி

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை சிறப்பாக்க நிபுணத்துவ புலனாய்வு அலுவலர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்தை திருத்துவதை மாத்திரம் கருத்திற் கொள்ளாது மக்கள் மனங்களில் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தி இலஞ்சம் மற்றும் ஊழலுக்கெதிரான சிந்தனையை வளர்க்க பல்வேறு ஆக்கபூர்மான நடவடிக்கைகளையும் எமது சட்டத் துறை அலுவலர்கள் உன்னத பணியாக முன்னெடுத்து வருகின்றனர். முன்னேறிய சமுதாயத்தின் உருவாக்கம் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். அதற்கான காலடியை ஆணைக்குழு உறுதியாக வைத்து முன் செல்கின்றது.

பொதுமக்கள் மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோரை அறிவூட்டுவதற்கு பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நேர்மையான சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டன. அவ்வாறே, பாடசாலை விடயதானத்திற்கு ஊழல் தடுப்பு விடயத்தை உள்ளடக்குதல் தொடர்பாக கல்வி அமைச்சுடன் சேர்ந்து நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்த வருட ஆரம்பத்திலிருந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது (CIABOC) ஜனாதிபதி செயலகத்தின் நெறிப்படுத்தலில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து க்குஅஜா நிறுவனத்தின் அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 30 கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கான கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெற்று பல சுற்று நிபுணத்துவ கலந்துரையாடல்களின் பின்பு பகுப்பாய்வு ரீதியாக இறுதிப்படுத்தப்பட்ட,இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்ட வரைவினை தயாரித்துள்ளதுடன் பாராளுமன்ற அனுமதியின் நிமித்தம் சமர்ப்பித்து உரிய அமைச்சரவை அனுமதிகளுடன் வெகுவிரைவில் மக்கள் மயப்படுத்தப்படுவதற்கான காத்திரமான முயற்சிகளை ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே இலங்கையை உலகின் முன்மாதிரியான தேசமாக உருவாக்கும் நோக்குடன், நேர்மையான அபிமான

திற்குரிய வருங்கால இலங்கையர்களை உருவாக்குவதனை தூரநோக்காகக் கொண்டு பயணிக்கும் ஆணைக்குழுவின் இலட்சியப்பயணத்தினை தேசிய செயற்பாட்டுத்திட்டம் நிறைவேற்றுவதற்கான காலம் விரைவில் உருவாகுதல் வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் அவாவுமாகும்.

இவ்வாறாக புதிய செல்நெறியுடன் பயணிக்கும் தற்போதைய ஆணைக்குழுவின் நியமனமானது 2015 ஒக்டோபர் 20 ஆம் திகதி ஆகும். இதன் படி தற்போதைய தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரீ.பீ. வீரசூரிய அவர்களும் ஆணையாளர்களாக ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டபிள்யு. லால் ரஞ்சித் சில்வா மற்றும் ஓய்வுபெற்ற சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி. நெவில் குருகே அவர்களும் பணிபுரிவதுடன் தற்போதைய பணிப்பாளர் நாயகமாக கடந்த 2016 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி பதவியேற்ற சனாதிபதி சட்டத்தரணி திரு சரத் ஜயமான அவர்கள் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாராபட்சமின்றியும் சுயாதீனமாகவும் செயற்பட்டு இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலினை இல்லாதொழிக்கும் பொருட்டு தம்மாலான பணிகள் அனைத்தையும் முன்னெடுப்பதில் ஆணைக்குழு திடசங்கற்பம் பூண்டுள்ளதுடன் இவ் இலட்சிய பயணத்தில் எம்முடன் இணைவதனூடாக.நேர்மையானதும் ஊழலற்றதுமான தேசத்தை உருவாக்கவும்; இன்றைய ஊழலுக்கு எதிரான சர்வதேச தினத்தின் உன்னத நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலைஇல்லாதொழிப்பதற்காகவும் எதிர்கால சந்ததியினருக்கு ஊழலற்ற தேசத்தை கையளிப்பதற்காகவும் எம்மாலான முயற்சிகளைகளையும் அர்ப்பணிப்புக்களையும் முன்னெடுக்க உறுதிபூணுவோம்.